A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi

# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in

**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**மேல்முறையீட்டு மனு எண் 09 / 2025**

திரு மா. ஜெயபாலன்,
27A, பன்னீர் செல்வம் வீதி,
ஒத்தக்கால் மண்டபம், கோவை – 641032.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு K.J. சபரீசன்)

எதிர்

1. செயற்பொறியாளர்/ இ&ப/குனியமுத்தூர்,
கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
குனியமுத்தூர் பவர் ஹவுஸ், எடையார்பாளையம் ரோடு,
குனியமுத்தூர் – 641 008.

2. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/குறிச்சி,
கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
Housing unit phase II, SIDCO, குறிச்சி, கோயமுத்து'ர் – 641 021.

3. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ஒத்தகல்மண்டபம்,
கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பஞ்சாயத்து அலுவலகம் எதிரில்,
க. எண். 7/10, வேலன்தவலம் ரோடு,
ஒத்தகல்மண்டபம், கோயமுத்தூர் – 641 032. . . . எதிர்மனுதாரர்கள்

(திரு S. சுரேஷ், செயற்பொறியாளர்/ இ&ப/குனியமுத்தூர்
திருமதி P. சுமதி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/குறிச்சி
திரு V. பாலாஜி, உதவி மின்பொறியாளர்/ இ&ப/ஒத்தகல்மண்டபம்)

**மனு பெறப்பட்ட நாள்: 30-01-2025**

**கேட்புரை நாள்: 19-03-2025**

**ஆணை நாள்: 24-03-2025**

30.01.2025 அன்று பெறப்பட்ட திரு மா. ஜெயபாலன், 27A, பன்னீர் செல்வம் வீதி, ஒத்தக்கால் மண்டபம், கோவை – 641032 அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 09/2025 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 19.03.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

### 1. மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:

மேல்முறையீட்டாளர் தன்னுடைய காலி இடத்தின் வழியாக செல்லும் service wire–ஐ அகற்றி தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

### 2.0 வழக்கின் சுருக்கம்:

2.1 மேல்முறையீட்டாளர் தன்னுடைய காலி இடத்தின் வழியாக செல்லும் service wire–ஐ அகற்றி தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

2.2 Service wire–ஐ மாற்றியமைக்க விரும்பினால் பங்களிப்பு வைப்பு முறையில் விண்ணப்பம் அளித்து அதற்கான மதிப்பீட்டுத் தொகையினை செலுத்தும் பட்சத்தில் மாற்றியமைக்க இயலும் என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எதிர்மனுதாரரின் பதிலில் திருப்தி இல்லாததால் மேல்முறையீட்டாளர் கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு, மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை 25.08.2024 அன்று அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு 18.10.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

## 3.0 மன்றத்தின் தீர்வு :

3.1 கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு, மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 18.10.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"மன்றத்தின் தீர்வு:*
> *The respondents are directed to study the possibilities for shifting the service wire line of Omsakthi kovil crossing over petitioners land through the edge of their site without giving hindrance for their proposed construction activities. The shifting may be donc under DCW Head ebserving all the rulos & regulations in force."*

## 4.0 மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 19.03.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு K.J. சபரீசன் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. சுரேஷ், செயற்பொறியாளர்/ இ&ப/குனியமுத்தூர், திருமதி P. சுமதி, உதவி செயற்பொறியாளர்/ இ&ப/குறிச்சி மற்றும் திரு V. பாலாஜி, உதவி மின்பொறியாளர்/ இ&ப/ஒத்தகல்மண்டபம் கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகளில் இம்முறையீட்டு மனுவிற்கு சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 **மேல்முறையீட்டாளரின் வாதங்கள்**:

5.1 தனக்கு சொந்தமான இடத்தின் மீது மின் கம்பி செல்வதை அகற்ற கோரி ஒத்தக்கால்மண்டபம் மின்சார வாரிய அலுவலகத்தில் AE யிடம் மனு கொடுத்ததாகவும், பலமுறை கேட்டுக்கொண்டும் அதன் மீது எந்த நடவடிக்கையும் 6 மாத காலமாக எடுக்கவில்லை எனவும், தனக்கு இப்பொழுது 80 வயதாகிறது, தன் வயது மூப்பின்காரணமாகவும், அரசு அதிகாரிகளின் அலட்சிய போக்கின் காரணமாகவும், தான் இணையவழி மூலம் இந்த பிரச்சனையை 31-Jul-2024 அன்று https://ccms.tangedco.org/tangedco-public. இதன் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் என் புகாரை 19-Aug-2024 அன்று அதை முடிக்கப்பட்டு விட்டதாக இணையத்தில் பதிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 அதனால், தான் மீண்டும் தன் புகாரை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் 25-08-2024 அன்று முறையிட்டதாகவும், தான் புகார் அளித்ததை அறிந்து, தனக்கு சவால் விடும் பொருட்டு, மின்வாரிய ஊழியர்கள் தன் இடத்தில், தன் அனுமதி இல்லாமல் வலுக்கட்டாயமாக பூட்டி இருந்த இரும்பு கதவை திறந்து, அகற்ற கோரிய மின் கம்பியை வலுவாக மாற்றிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் முன் 01-10-2024 அன்று ஆஜர் ஆகி, மின் கம்பியை அகற்றும் ஆணையை 18-10-2024 அன்று பெற்றுக்கொண்டதாகவும், இந்த ஆணையின் மூலம் நடவடிக்கை எடுக்க மேல் அதிகாரிகளிடம் வேண்டுதல் விடுத்தும் அதை மாற்றாமல், தன்னை இத்தனை நாளாக அலைக்கழித்து கொண்டு இருப்பதாகவும், தான் நேர்மையாக, அரசு மீது நம்பிக்கையை கொண்டு, அது வழிகாட்டும் வழியில் தன் முறையீடுகளை செய்தும், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை தங்கள் புகாரை சரி செய்யவில்லை எனவும், தாங்கள் ஆசிரியர் குடும்பம் என்பதாலும், தங்களுக்கு எந்த வித அதிகார பின்புலம் இல்லை என்பதாலும், இத்தனை நாட்களாக அலைக்கழிக்கப்பட்டு கடுமையான மன உளைச்சலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 தற்பொழுது தனது கடைசி நம்பிக்கையாக இந்த மனுவை சமர்ப்பிப்பதாகவும், இதன் மூலம், தன் இடத்தின் வழியாக செல்லும் மின் கம்பியை அகற்றி தன் போன்ற மூத்த குடிமகனின் வேண்டுகோளை ஏற்று தக்க ஆவண செய்து உதவுமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

## 6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 கோவை மின் பகிர்மான வட்டம், ஒத்தக்கால்மண்டபம் பிரிவு அலுவலகம் சார்ந்த பிரிமியர் நகர் பகிர்மானத்திலுள்ள, பள்னீர்செல்வம் வீதியில் க.எண் 23A முகவரி கொண்ட திரு.ஜெயபாலன் த/பெ.மாரியப்ப செட்டியார் அவர்களுக்கு 1998ம் வருடம் பதிவாகியுள்ள கிரயம் எண் 1538/1998 பத்திரத்தின் படி க.ச.எண்.660/2 பூமியில் உள்ள காலிமனைக்கு சொத்து விபரத்தில் உள்ளபடி வடதிசையில் கிழமேல் தடமாக செல்லும் பன்னீர் செல்வம் வீதியில் சென்று கொண்டிருக்கும் மின்வாரிய தாழ்வழுந்த மின்கம்பத்திலிருந்து மனையின் தெற்கில் 1996ல் கிரய ஆவண எண் ECNo.135124479/2024 படி பாத்தியம் பெற்றிருந்த காலஞ்சென்ற O.S.வேலுச்சாமி அவர்களால் அங்கு நிறுவப்பட்டிருந்த ஆதிபராசக்தி கோவிலுக்கு மனையின் குறுக்காக 1986ல் பெறப்பட்டிருந்த மின் இணைப்பின் ஒயரானது தற்போதும் கடந்து வருவதை அகற்றக்கோரி திரு.மா.ஜெயபாலன் அவர்களால் 31.07.2024 அன்று மின்னகம் புகாரில் குறைகளை தெரிவித்ததையடுத்து களஆய்வு மேற்கொண்டு மனையின் குறுக்கே சென்று கொண்டிருக்கும் service wire–ஐ வேறு வழியில் மாற்றிக்கொள்ள அலுவலகத்தின் கடிதம் வாயிலாக கோவில் பொறுப்பாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டபோது கடிதத்தை கோவில் பொறுப்பாளர்களால் வாங்க மறுக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 ஆகவே, அதனைத்தொடர்ந்து 25.08.2024 அன்று கோவை/மின்பகிர்மான வட்டம்/தெற்கு மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் அளிக்கப்பட்ட மனுவின் பேரில் திரு.மா.ஜெயபாலன் அவர்களுக்கு சொந்தமான இடத்திலேயே மேற்கு திசையில் உள்ள மதில் சுவற்றின் உட்புற ஓரமாக வருமாறு அமைத்துக்கொள்ள 18.10.2024 அன்று மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் தெரிவித்த சமரசத்தீர்வினை திரு.மா.ஜெயபாலன்

ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மேற்படி சமரசத்தீர்வை ஆதிபராசக்தி கோவில் பொறுப்பாளரிடம் வாய்மொழியாகவும், பதிவுத்தபால் மூலம் 05.12.2024 அன்று வழங்கியபோதும் அக்கடிதத்தை ஏற்க மறுத்துவிட்டதினால் மின்மானி பலகை இடம்மாறாமல் service wire னை மட்டும் மாற்று வழியில் இடம்மாற்றி கொண்டு வர பன்னீர் செல்வம் விதியில் தற்போது உள்ள மின் கம்பத்திலிருந்து மாற்று மின்கம்பத்திற்கு இணைப்பு கொடுக்க 115 அடிக்கு மேல் வருவதால் புதிய மின்கம்பம் ஒன்றினை திரு.மா.ஜெயபாலன் அவர்களின் இடத்தின் மேற்கில் உள்ள மதில் சுவற்றில் நேரே வடதிசையில் பன்னீர்செல்வம் வீதியில் புதிய மின் கம்பம் அமைத்துக்கொடுக்க வேண்டியிருப்பதால் அதற்கான மதிப்பீடு தயாரித்து தொகையினை செலுத்த திரு.மா.ஜெயபாலன் அவர்களால் மதிப்பீட்டுத்தொகை செலுத்த ஏற்கப்படவில்லை என்பதால் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் சமரசதீர்வினை செயல்படுத்த இயலாத நிலை இருந்து வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் தனக்கு சொந்தமான இடத்தின் மீது மின் கம்பி செல்வதை அகற்ற கோரி ஒத்தக்கால்மண்டபம் மின்சார வாரிய அலுவலகத்தில் AE யிடம் மனு கொடுத்ததாகவும், பலமுறை கேட்டுக்கொண்டும் அதன் மீது எந்த நடவடிக்கையும் 6 மாத காலமாக எடுக்கவில்லை எனவும், தான் இணையவழி மூலம் இந்த பிரச்சனையை 31-Jul-2024 அன்று <u>https://ccms.tangedco.org/tangedco-public</u> பதிவிட்டதாகவும் இதன் மீது எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் தன் புகாரை 19-Aug-2024 அன்று முடிக்கப்பட்டுவிட்டதாக இணையத்தில் பதிவிட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.3 மின் நுகர்வோர் குறைதீர்மன்றத்தின் முன் 01-10-2024 அன்று ஆஜர் ஆகி, மின் கம்பியை அகற்றும் ஆணையை 18-10-2024 அன்று பெற்றுக்கொண்டதாகவும், இந்த

ஆணையின் மூலம் நடவடிக்கை எடுக்க மேல் அதிகாரிகளிடம் வேண்டுதல் விடுத்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இதுவரை தங்கள் புகாரை சரி செய்யவில்லை எனவும், தற்பொழுது தனது கடைசி நம்பிக்கையாக இந்த மனுவை சமர்ப்பிப்பதாகவும், இதன் மூலம், தன் இடத்தின் வழியாக செல்லும் மின் கம்பியை அகற்றி தருமாறு மேல்முறையீட்டாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

7.4 எதிர்மனுதாரர் தனது வாதுரையில் திரு.ஜெயபாலன் அவர்களுக்கு 1998ம் வருடம் பதிவாகியுள்ள கிரயம் எண் 1538/1998 பத்திரத்தின் படி க.ச.எண்.660/2 பூமியில் உள்ள காலிமனைக்கு சொத்து விபரத்தில் உள்ளபடி வடதிசையில் கிழமேல் தடமாக செல்லும் பன்னீர் செல்வம் வீதியில் சென்று கொண்டிருக்கும் மின்வாரிய தாழ்வழுந்த மின்கம்பத்திலிருந்து மனையின் தெற்கில் 1996ல் கிரய ஆவண எண் ECNo.135124479/2024 படி பாத்தியம் பெற்றிருந்த காலஞ்சென்ற O.S.வேலுச்சாமி அவர்களால் அங்கு நிறுவப்பட்டிருந்த ஆதிபராசக்தி கோவிலுக்கு மனையின் குறுக்காக 1986ல் பெறப்பட்டிருந்த மின் இணைப்பின் ஒயரானது தற்போதும் கடந்து வருவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.5 அதனை அகற்றக்கோரி திரு.மா.ஜெயபாலன் அவர்களால் 31.07.2024 அன்று மின்னகம் புகாரில் குறைகளை தெரிவித்ததையடுத்து களஆய்வு மேற்கொண்டு மனையின் குறுக்கே சென்று கொண்டிருக்கும் service wire–ஐ வேறு வழியில் மாற்றிக்கொள்ள அலுவலகத்தின் கடிதம் வாயிலாக கோவில் பொறுப்பாளர்களிடம் கேட்டுக்கொள்ளப்பட்டபோது கடிதத்தை கோவில் பொறுப்பாளர்களால் வாங்க மறுக்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 அதனைத்தொடர்ந்து 25.08.2024 அன்று கோவை/மின்பகிர்மான வட்டம்/தெற்கு மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் அளிக்கப்பட்ட மனுவின் பேரில் திரு.மா.ஜெயபாலன் அவர்களுக்கு சொந்தமான இடத்திலேயே மேற்கு திசையில் உள்ள மதில் சுவற்றின் உட்புற ஓரமாக வருமாறு அமைத்துக்கொள்ள 18.10.2024 அன்று மின்நுகர்வோர் குறைதீர் மன்றத்தில் தெரிவித்த சமரசத்தீர்வினை திரு.மா.ஜெயபாலன் ஏற்றுக்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேற்படி சமரசத்தீர்வை ஆதிபராசக்தி கோவில் பொறுப்பாளரிடம் வழங்கியபோது அக்கடிதத்தை ஏற்க மறுத்துவிட்டதினால் மின்மானி பலகை இடம்மாறாமல் service wire னை மட்டும் மாற்று வழியில் இடம்மாற்றி கொண்டு வர தற்போது உள்ள மின் கம்பத்திலிருந்து மாற்று மின்கம்பத்திற்கு இணைப்பு கொடுக்க 115 அடிக்கு மேல் வருவதால் புதிய மின்கம்பம் ஒன்றினை திரு.மா.ஜெயபாலன் அவர்களின் இடத்தின் மேற்கில் உள்ள மதில் சுவற்றில் நேரே வடதிசையில் பன்னீர்செல்வம் வீதியில் புதிய மின் கம்பம் அமைத்துக்கொடுக்க வேண்டியிருப்பதால் அதற்கான மதிப்பீடு தயாரித்து தொகையினை செலுத்த திரு.மா.ஜெயபாலன் அவர்களால் மதிப்பீட்டுத்தொகை செலுத்த ஏற்கப்படவில்லை என்பதால் மின் நுகர்வோர் குறைதீர் மன்றத்தின் சமரசதீர்வினை செயல்படுத்த இயலாத நிலை இருந்து வருகிறதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 இது சம்பந்தமாக மின்சார சட்டம், 2003–இன் 68 (1), (2)(a) மற்றும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6) விதித் தொகுப்புகளில் கூறப்பட்டுள்ள வரையறைகள் ஆராய விரும்புகின்றேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"**68. Overhead lines***
*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub–section (2).*
*(2) The provisions contained in sub–section (1) shall not apply–*
*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer".*

மேற்கூறிய மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது.

"***(29) Service Lines:***

*xxx*

*xxx*

*(6) The Consumer shall permit the Licensee to install all requisite equipments such as Transformers, switchgears, meters, etc., and to lay necessary cables or overhead lines and to provide connections thereto on the consumer's premises and shall also permit the Licensee to extend supply to other consumers through the cables, lines and equipments installed in the consumer's premises, provided that supply to the consumer in the opinion of the Engineer is not thereby unduly affected."*

மேற்கூறிய தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதி 29(6)–இன்படி நுகர்வோருக்குத் தரப்படும் மின்னிணைப்புக்குப் பேரளவு பாதிப்பு ஏதும் ஏற்படாதெனப் பொறியாளர் கருதும் போது நுகர்வோர் மின்மாற்றிகள், இணைப்பமைப்புகள், மின்னளவிகள் போன்ற அனைத்து தேவைப்படும் சாதனங்களை நிறுவவும் நுகர்வோரது இருப்பிடத்துக்கு இணைப்பு தரவும் அங்கிருந்து பிற நுகர்வோர்களின் இருப்பிடங்களுக்கு இணைப்பு தரவும் தேவைப்படும் மின் வடம், மேனிலைத் தொடர் மற்றும் பிற இணைப்புகளை அமைக்கவும் உரிமதாரருக்கு இசைவு தர வேண்டும் என தெரிய வருகிறது.

7.9 மேலும், சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களிலிருந்து மேல்முறையீட்டில் குறிப்பிட்டுள்ள service wire–ஆனது 1986 ஆம் ஆண்டு ஆதிபராசக்தி கோவிலுக்கு மின் இணைப்பு வழங்க நிறுவப்பட்டது என்பதும், மேல்முறையீட்டாளர் அந்த காலிமனையை 1998 ஆம் ஆண்டு தான் கிரயம் பெற்றதும் தெரியவருகிறது. மேலும், அந்த service wire–ஆனது மின் நுகர்வோருக்கு செல்லும் காப்பிடப்பட்ட கம்பி (insulated service wire) என எதிர்மனுதாரர் தெரிவித்த நிலையில் அந்த service wire அமைக்கப்பட்ட காலகட்டத்தில் எவ்வித ஆட்சேபனையும் பெறப்பட்டதாக தெரியவில்லை. மேலும் மின் கட்டமைப்பு உரிமதாரர் நிறுவுவது செலவீனங்களின் அடிப்படையில் பொது மக்களின் பயன்பாட்டிற்கு மின் இணைப்பு வழங்கும் நிகழ்வாகவே நடைபெறுகிறது.

7.10 இந்நிலையில் காலியாக இருந்த இடத்தில் பாதுகாப்பு விதிகளின்படி மின்நுகர்வோருக்கு மின் இணைப்பு வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்ட காப்பிடப்பட்ட மின் கட்டமைப்பை அது நிறுவப்பட்ட 1986–இல் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்காத நிலையில் மேல்முறையீட்டாளர் 1998–இல் அந்த காலிமனையை கிரயம் பெற்று தற்போது 2024–இல் வாரிய செலவில் மாற்ற வேண்டும் என்ற கோரிக்கை காலங்கடந்த நிலையில் எழுப்புவதாக தெரியவருகிறது.

7.11 இந்நிலையில் விதிகளின்படி போதிய இடைவெளியுடன் பாதுகாப்பாக நிறுவப்பட்ட மின்பாதையை மேல்முறையீட்டாளர் இடமாற்றம் செய்ய விரும்பினால் அதற்கு ஆகும் மதிப்பீட்டு செலவு யாரை சாறும் என்பதை அறிய தமிழ்நாடு மின்சார

வழங்கல் விதி தொகுப்பு விதி 6–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> ***"மின்இணைப்பு/மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் மாற்றல் கட்டணம்:***
> *(1) மின்னிணைப்பு / மின்தொடர், கட்டமைப்பு மற்றும் சாதனங்கள் இடமாற்றுவதற்கான கட்டணத்தை நுகர்வோரே ஏற்க வேண்டும். மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே கட்டிவிட வேண்டும். மதிப்பீட்டின் நகல் நுகர்வோருக்கு வழங்க வேண்டும். அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும். "*

7.12 மேற்கூறிய விதியை ஆராயும்போது நிறுவப்பட்ட நிலையிலிருந்து மின்பாதையை இடமாற்றம் செய்ய மேல்முறையீட்டாளர் கோரும்பட்சத்தில் உரிய மதிப்பீட்டு தொகையை மேல்முறையீட்டாளர் செலுத்த வேண்டும் எனவும், மதிப்பீடு செய்யப்பட்ட இடமாற்றத் தொகையை நுகர்வோர் முழுமையாக முன் கூட்டியே செலுத்திவிட வேண்டும் எனவும் அத்தொகை செலுத்தப்பட்ட பின்னரே இடமாற்ற பணி மேற்கொள்ளப்படும் எனவும் தெரிய வருகிறது.

7.13 நிறுவப்பட்ட நிலையிலிருந்து service wire–ஐ மேல்முறையீட்டாளர் கோரும் வண்ணம் இடமாற்றம் செய்ய இயலுமா என எதிர்மனுதாரரை கேட்புரையின் போது வினவியதற்கு, மேல்முறையீட்டாளரின் காலிமனையின் ஓரமாக மாற்றுப் பாதையில் அமைக்க வாய்ப்பு இருப்பதாக தெரிவித்த நிலையில் அதை மாற்றுவதற்கான கட்டணத்தை மட்டும் மேல்முறையீட்டாளர் செலுத்தும்பட்சத்தில் அதனை மாற்றியமைக்க இயலும் என தெரிவித்தார்.

7.14 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் service wire நிறுவப்பட்ட பிறகே அந்த காலிமனைக்கு உரிமையாளர் ஆவதால் அந்த service wire–ஐ அவரின் காலிமனைக்கு ஓரமாக மாற்று பாதையில் அமைப்பதற்கு உரிய மதிப்பீட்டு தொகையை செலுத்தும்பட்சத்தில் service wire–ஐ மாற்றிதர இயலும் என்ற நுகர்வோர் குறைதீர்மன்றம் வழங்கிய ஆணையில் மாற்றம் ஏதும் தேவையில்லை என்று தீர்வு செய்யப்படுகிறது.

**8.0 <u>முடிவுரை:</u>**

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, உரிய விதிகளின்படி போதுமான பாதுகாப்பு இடைவெளியுடன் நிறுவப்பட்டு பயன்பாட்டில் உள்ள service wire–ஐ

மேல்முறையீட்டாளர் மாற்ற விரும்பினால் தமிழ்நாடு மின் வழங்கல் விதி எண்.6–ன்படி மின்பாதையை மாற்றியமைப்பதற்கு ஆகும் உரிய தொகையை செலுத்தும்பட்சத்தில் தொழில்நுட்ப சாத்திய கூறுகளின் அடிப்படையில் மாற்றியமைக்க எதிர்மனுதாரருக்கு உத்திரவிடப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 09/2025 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

<u>பெறுநர்</u>

1. திரு மா. ஜெயபாலன், – By RPAD
27A, பன்னீர் செல்வம் வீதி,
ஒத்தக்கால் மண்டபம், கோவை – 641032.

2. செயற்பொறியாளர்/ இ&ப/குனியமுத்தூர்,
கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
குனியமுத்தூர் பவர் ஹவுஸ், எடையார்பாளையம் ரோடு,
குனியமுத்தூர் – 641 008.

3. உதவி செயற்பொறியாளர்/ இ&ப/குறிச்சி,
கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
Housing unit phase II, SIDCO, குறிச்சி, கோயமுத்து'ர் – 641 021.

4. உதவி மின்பொறியாளர்/ இ&ப/ஒத்தகல்மண்டபம்,
கோயமுத்தூர் மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
பஞ்சாயத்து அலுவலகம் எதிரில்,
க. எண். 7/10, வேலன்தவலம் ரோடு,
ஒத்தகல்மண்டபம், கோயமுத்தூர் – 641 032.

5. மேற்பார்வை பொறியாளர், – By Email
**கோயம்புத்தூர்** மின் பகிர்மான வட்டம்/தெற்கு,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
எண்.2940, டாடாபாத், கோயம்புத்தூர் – 641 012.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – <u>தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக</u>
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை,
கிண்டி, சென்னை – 600 032.